2. **கூற்று (A) : தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது.**

**காரணம் (R) : செலவுமுறையில் மட்டும் நாட்டு வருமானம் கணக்கிட முடியும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.
இ) A சரி ஆனால் R தவறு.
ஈ) A தவறு ஆனால் R சரி.

**[விடை: இ) A சரி ஆனால் R தவறு.]**

3. **கூற்று (A) : உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும்.**

**காரணம் (R) : ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வாணிகம் போன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.
இ) A சரி ஆனால் R தவறு.
ஈ) A தவறு ஆனால் R சரி.

**[விடை: அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.]**

**VII. கீழ்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றை தெரிவு செய் :**

1. **நாட்டு வருமானத்தின் அடிப்படை கருத்துக்கள்**

அ) மொத்த நாட்டு உற்பத்தி
ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி
இ) நிகர நாட்டு உற்பத்தி
ஈ) வெளியீடு = வருமானம் = செலவு

**[விடை: ஈ) வெளியீடு = வருமானம் = செலவு]**

2. **நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள்**

அ) உற்பத்தி முறை ஆ) நுகர்வு முறை
இ) வருமான முறை ஈ) செலவின முறை

**[விடை: ஆ) நுகர்வு முறை]**

3. **தலா வருமானம்**

அ) ஒரு நாட்டின் மொத்த வருமானம்
ஆ) ஒருவருடைய சராசரி வருமானம்
இ) நாட்டு வருமானம் / மக்கள் தொகை
ஈ) GDP / மக்கள் தொகை

**[விடை: அ) ஒரு நாட்டின் மொத்த வருமானம்]**



www.surabooks.com



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



4. **உழைப்பாளரின் வருமானம்**

அ) கூலி
ஆ) வருமான ஈவு (Divident)
இ) சம்பளம்
ஈ) உற்பத்தி திறன் ஊக்கு ஊதியங்கள் (Fring benefits)

**[விடை: ஆ) வருமான ஈவு (Divident)]**

## பகுதி - ஆ

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.** **2 மதிப்பெண்கள்**

1. **உண்மை வருமானம் என்றால் என்ன?**

விடை. (i) பண வருவாய் என்பது தேசிய வருமானத்தை ஒரு ஆண்டில் உள்ள பொது விலை அளவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.

(ii) உண்மை வருவாயை கீழ்கண்ட முறையில் கணக்கிடலாம்.

| | | |
|---|---|---|
| நிலையான விலையில் தேசிய வருமானம் | = | நடப்பு விலையில் தேசிய வருவாய் ÷ $P_1/P_0$ |

2. **தேசிய வருவாய் என்றால் என்ன?**

விடை. (i) ஓர் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பை கணக்கிட்டு, அதனை பணமதிப்பில் மதிப்பிடப்பட வேண்டும்.

(ii) அதாவது நமது சுய நுகர்வுக்காகவோ அல்லது சேமிப்பிற்காகவோ பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் அதன் பண மதிப்பையும் தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்க வேண்டும்.

3. **மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன? அதன் சூத்திரம் எழுதுக?**

விடை. (i) ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலைப் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த சந்தை மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

(ii) செலவு முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படும்

(iii) $GDP = C + I + G + (X - M)$

4. **செலவிடக்கூடிய வருமானம் என்றால் என்ன?**

விடை. (i) செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் செலவிடக்கூடிய வருமானத்தை குறிக்கிறது.

(ii) தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முகவரிகளை கழித்தால் கிடைப்பது செலவிடக்கூடிய வருமானம்.

5. **மூலதன இலாபம் என்றால் என்ன?**

விடை. மூலதன சொத்துக்களான வீடு மற்றும் பிற சொத்துக்கள், பங்குகள் போன்றவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறது.

## பகுதி - இ

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக.** **3 மதிப்பெண்கள்**

1. **தேசிய வருமானத்தை கணக்கிடும் முறைகளில் உள்ள பிரச்சனைகள் யாவை?**

விடை. (i) மாற்றுச் செலுத்தல்கள்
(ii) தேய்மானங்கள் மதிப்பிடுவதில் உள்ள சிக்கல்
(iii) பணம் செலுத்தப்படாத சேவைகள்
(iv) சட்ட விரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம்
(v) சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம்
(vi) மூலதன இலாபம்
(vii) புள்ளி விவர சிக்கல்

2. **புள்ளி விபர சிக்கல் எப்போது ஏற்படும்?**

விடை. புள்ளி விபரம் என்பது பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும் கண்ணாடி போன்றது. இதனை சேகரிப்பதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உள்ளன. நாட்டின் வளர்ச்சி நிலையை அறிய புள்ளி விபரம் அவசியமான ஒன்று.

பிரச்சனைகள் :
(i) நம்பகத் தன்மையின்மை
(ii) சேகரிப்பவரின் திறமை குறைவு
(iii) அர்ப்பணிப்பு இன்மை

போன்றவை புள்ளிவிபரம் சேகரிப்பதில் ஏற்படும் சிக்கல்கள் ஆகும்.

## பகுதி - ஈ

**கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி :** **5 மதிப்பெண்கள்**

1. **நாட்டு வருமானத்தை வருமான முறையில் கணக்கிடுவதை பற்றி விளக்குக.**

விடை. (i) வருமான முறை என்பது தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது.

(ii) வருமான முறை, காரணிகள் சம்பாதிக்கும் முறை என்றும் அழைக்கப்படுகிறது.

**கணக்கிடுவதன் நிலைகள் :**

(1) மொத்த நிறுவனங்களும் வெவ்வேறு தொழில் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன.

(2) காரணிகளின் வருவாய் மூன்று வகையான இனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது உழைப்பாளர் வருமானம், மூலதன வருமானம் மற்றும் கலப்பு வருமானம்.



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



(i) **உழைப்பாளர் வருமானம் :** கூலி மற்றும் சம்பளம், சமூக பாதுகாப்புக்கு. முதலாளியின் பங்கு, உற்பத்தி திறன் ஊக்கு ஊதியங்கள்.

(ii) **மூலதன வருமானம் :** இலாபம், வட்டி, இலாப ஈவு மற்றும் இராயல்டி.

(iii) **கலப்பு வருமானம் :** விவசாயம் மற்றும் பண்ணை சிறு தொழில் செய்வோர் மற்றும் பிற வேலைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்.

(iv) **உள்நாட்டு காரணி :** ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் நிகர வருவாயை கூட்டுவதன் மூலம் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

$$Y = w + r + i + \pi + (R-P)$$

இதில்,

w = கூலி, r = வாடகை, i = வட்டி, $\pi$ = இலாபம், R = ஏற்றுமதி, P = இறக்குமதி.

**2. தேசிய வருமானத்தை உற்பத்தி முறையில் எவ்வாறு கணக்கிடுவாய் என விளக்குக.**

**விடை.** (i) உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும்.

(ii) இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது.

(iii) ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும்.

(iv) இந்தியாவில் பண்ணை உற்பத்தியின் மொத்த மதிப்பு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

(v) 64 வகை விவசாயப் பொருள்களின் மொத்த உற்பத்தி மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு பயிரின் அதன் ஒரு ஹெக்டேருக்கான சராசரி உற்பத்தியை கணக்கிட்டு அந்தந்தப் பயிர்கள் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பால் பெருக்கி பயிரின் உற்பத்தி கணக்கிடப்படுகிறது.

(vi) ஒவ்வொரு பொருளின் மொத்த உற்பத்தியும் சந்தை விலையால் மதிப்பிடப்படுகிறது.

(vii) இந்த 64 வகை பயிர்களின் மொத்த உற்பத்தி மதிப்பை எடுத்துக்கொண்டு விவசாயத் துறையின் மொத்த உற்பத்தியின் மதிப்பு கணக்கிடப்படுகிறது.

(viii) விவசாய உற்பத்தியின் நிகர மதிப்பு கணக்கிடுவதற்கு மொத்த விவசாய உற்பத்தி மதிப்பிலிருந்து விதை, உரம், அங்காடி கட்டணம், சரி செய்தல் மற்றும் தேய்மானம் போன்ற செலவுகள் கழிக்கப்படுகின்றன.

(ix) இதுபோல, மற்ற துறைகளுக்கும் (உதாரணம் கால்நடை காடுகள், மீன், சுரங்கம், தொழிற்சாலை) மொத்த உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் சந்தை விலையால் பெருக்கி உற்பத்தியின் மொத்த மதிப்பு பெறப்படுகிறது.

(x) இவ்வாறுதான், பிற துறைகளின் உற்பத்தி நிகர பங்களிப்பின் மதிப்பு தேசிய வருவாயில் எவ்வளவு இருக்கிறது என கணக்கிடப்படுகிறது.

**3. தேசிய வருவாய் மற்றும் பொதுநலன் ஆகியவற்றின் குறைபாடுகளை விளக்குக.**

**விடை.** (i) பொருட்கள் மற்றும் பணிகளின் அளிப்பை பொது நலன் சார்ந்து உள்ளது.

(ii) நுகர்வு பொருட்களை காட்டிலும் மூலதன பொருட்கள் அதிகமாக இருந்தால் பொருளாதார நலனின் முன்னேற்றம் குறைவாக இருக்கும். அதே போன்று ஆடம்பர பொருட்களின் உற்பத்தி பணக்காரர்களுக்காக மட்டுமே இருக்கும்.

(iii) இயற்கை வளங்களான காற்று, நீர் மற்றும் மண் போன்றவற்றை மாசுபடுத்தி அதிகமான GDP யை பெற்றால் பொருளாதார நலன் குறையும்.

(iv) இராணுவ தளவாடங்கள் உற்பத்தி அதிகரிப்பதினால் தேசிய உற்பத்தி அதிகரித்தாலும் பொருளாதார நலன் குறையும்.

(v) பெண்களுக்கு வேலைவாய்ப்பை தருதல் மற்றும் உழைப்பாளர்களை அதிக நேரம் வேலை செய்ய வைத்தல் போன்றவற்றின் மூலமாக தலைவீத வருமானத்தை அதிகரிக்கலாம். ஆனால் பொருளாதார நலனில் முன்னேற்றம் இருக்காது.

☆☆☆





orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

அத்தியாயம்

# 3

# வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

## பொருளடக்கம்


3.1 அறிமுகம்

3.2 முழுவேலை வாய்ப்பின் பொருள்

3.3 வேலையின்மையின் வகைகள்

3.4 வேலை வாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாடு

3.4.1 சேயின் சந்தை விதி

3.5 வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் பற்றிய கீன்ஸின் கோட்பாடு

3.6 விளைவுத் தேவை

3.6.1 தொகு தேவைச் சார்பு (Aggregate Demand Function)

3.6.2 தொகு அளிப்புச் சார்பு (Aggregate Supply Function)

3.6.3 ADF மற்றும் ASF ன் சமநிலை

3.7 தொன்மையியம் மற்றும் கீன்ஸியம் – ஓர் ஒப்பீடு




www.surabooks.com



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



## கருத்துப் படம்




## முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **முழு வேலை வாய்ப்பின் பொருள்** | : | நல்ல உடல் நலம் உள்ள தனி நபர்கள் மற்றும் நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கிறதெனில் அதனை முழு வேலை வாய்ப்பு என்கிறோம். |
| **வேலையின்மையின் வகைகள்** (Types of unemployment) | : | வேலையின்மை என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத்தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் தகுந்த வேலையில்லாத சூழ்நிலை வேலையின்மை ஆகும். |
| **வாணிபச் சூழல் வேலையின்மை** (Cyclical unemployment) | : | கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சூழல் வேலையின்மை (Cyclical unemployment) என்று பெயர். |
| **பருவகால வேலையின்மை** (Seasonal unemployment) | : | ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். |
| **கற்றோர் வேலையின்மை** (Educated unemployment) | : | சில நேரங்களில் படித்து கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலைகிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர் இதுவே கற்றோர் வேலையின்மை எனப்படும். |
| **விளைவுத் தேவை** (Effective Demand) | : | விளைவுத் தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். |
| **தொகு அளிப்புச் சார்பு** [Aggregate Supply Function : (ASF)] | : | தொகு அளிப்புச் சார்வு என்பது அதிகரிக்கும் வேலைவாய்ப்பை குறிப்பிடுகிறது. ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் தொகு மதிப்பே தொகு அளிப்பு எனப்படும். |



www.surabooks.com



orders@surabooks.com
PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



| | | |
|---|---|---|
| **இறுதிநிலை நுகர்வு விருப்பம்** | : | இருக்கின்ற வருமானத்தில் ஓர் அலகு வருமானம் உயரும் போது அதிகரிக்கக் கூடிய நுகர்வுச் செலவு. |
| **மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன்** | : | புதிய மூலதன பொருளின் செலவைகாட்டிலும் அதிகமாக எதிர்பார்க்கக் கூடிய விளைவு விகிதம். |
| **பண அளிப்பு** | : | ஒரு பொருளாதாரத்தில் புழக்கத்தில் இருக்கிற மொத்த பணத்தின் இருப்பு. |

# இலக்கணங்கள்

| | | |
|---|---|---|
| **வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாட்டின் இலக்கணம்** | : | ஒனாகாட் P மற்றும் ஒனாகாட் R ன் கூற்றுப்படி, "புகுத்தப்பட்ட சோம்பேறித்தனத்தினால், வேலையில்லாதவர்கள், ஒழுக்கச் சிதைவு, நம்பிக்கையின்மை, வெறுப்புணர்வு மற்றும் சுய மரியாதை இழப்பு ஆகியவற்றால் துன்புறுகிறார்கள்". |
| **முழு வேலை வாய்ப்பிற்கான இலக்கணம்** | : | லர்னரின் கூற்றுப்படி, "முழு வேலை நிலை என்பது கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறி மாறி அதிகரிக்கின்றதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது" என்கிறார். |
| **வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாட்டின் இலக்கணம்** | : | உற்பத்தியின் மூலம் ஒரு நபர் அவர் வருவாயை ஈட்டுகிறார், அது மற்றவர் உற்பத்தி செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்குவதற்கு செலவிடப்படுகிறது. நாடு முழுவதிலும் மொத்த உற்பத்தி மொத்த வருவாய்க்கு சமமாக இருக்கும். |
| **கீன்ஸின் தொன்மைக் கோட்பாட்டின் இலக்கணம்** | : | கீன்ஸின் கூற்றுப்படி, "தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் ஒரு முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் சந்தை சக்திகளே மாற்றங்களை ஏற்படுத்தி சமநிலையை உருவாக்கும்". |
| **விளைவுத் தேவை பற்றிய இலக்கணம்** | : | கீன்ஸின் கூற்றுப்படி, பொருட்கள் மற்றும் பணிகளை நுகர்வு மற்றும் மூலதனத்திற்காக செலவு செய்யப்பட்ட பணமே விளைவுத் தேவை ஆகும். |
| **தொகு தேவைச் சார்பின இலக்கணம்** | : | கீன்ஸின் கூற்றுப்படி, ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவை. |



www.surabooks.com



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



## புத்தக வினாக்கள் மற்றும் விடைகள்

### மாதிரி வினாக்கள்

### பகுதி - அ

**சரியான விடையை தெரிவு செய்க :**

1. **நடப்புக்கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது ________ எனப்படும்.**
அ) முழு வேலைவாய்ப்பு
ஆ) குறைந்தளவு வேலைவாய்ப்பு
இ) வேலைவாய்ப்பின்மை
ஈ) வேலைக்கான வாய்ப்பு
**[விடை: அ) முழு வேலைவாய்ப்பு]**

2. **அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு ________.** *[PTA-3]*
அ) இயங்கா சமுதாயம்
ஆ) சமதர்ம சமுதாயம்
இ) இயங்கும் சமுதாயம்
ஈ) கலப்புப் பொருளாதாரம்
**[விடை: இ) இயங்கும் சமுதாயம்]**

3. **மறைமுக வேலையின்மையில், உழைப் பாளியின் இறுதிநிலை உற்பத்தி** *[Govt. MQP -2019; QY-2019; Sep-2020]*
அ) பூஜ்யம் ஆ) ஒன்று
இ) இரண்டு ஈ) நேர்மறை
**[விடை: அ) பூஜ்யம்]**

4. **தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு ________.**
அ) குறைந்த அளவு வேலைவாய்ப்பு
ஆ) பொருளாதாரம் எப்போதும் சம நிலையில் இருக்கும்
இ) தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது
ஈ) நிறை குறை போட்டி
**[விடை: ஆ) பொருளாதாரம் எப்போதும் சம நிலையில் இருக்கும்]**

5. **J. B. சே ஒரு ________.** *[PTA-3; Mar-2020]*
அ) புதிய - தொன்மை பொருளியலாளர்
ஆ) தொன்மை பொருளியலாளர்
இ) நவீன பொருளியலாளர்
ஈ) புதிய பொருளியலாளர்
**[விடை: ஆ) தொன்மை பொருளியலாளர்]**

6. **கீன்ஸின் கருத்துப்படி, முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது?** *[PTA-1]*
அ) முழு வேலைவாய்ப்பு
ஆ) தன் விருப்ப வேலையின்மை
இ) தன் விருப்பமற்ற வேலையின்மை
ஈ) குறைவு வேலைவாய்ப்பு
**[விடை: ஈ) குறைவு வேலைவாய்ப்பு]**

7. **வேலைவாய்ப்பு பற்றி தொன்மை கோட்பாட்டின் மையக்கருத்து என்பது ________.** *[PTA-5]*
அ) குறைந்து செல் விளைவு விதி
ஆ) தேவை விதி
இ) அங்காடி விதி
ஈ) நுகர்வு விதி **[விடை: இ) அங்காடி விதி]**

8. **கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது ________.**
அ) விளைவு அளிப்பு பற்றாக்குறை
ஆ) விளைவு தேவை பற்றாக்குறை
இ) இரண்டும் பற்றாக்குறை
ஈ) எவையும் இல்லை
**[விடை: ஆ) விளைவு தேவை பற்றாக்குறை]**

9. **சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சமநிலையை கொண்டு வருவது ________ நெகிழ்வு ஆகும்.** *[Sep-2020]*
அ) தேவையின் ஆ) அளிப்பின்
இ) மூலதனத்தின் ஈ) வட்டியின்
**[விடை: ஈ) வட்டியின்]**

10. **நவீன பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில் ________ கோட்பாடு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.**
அ) கீன்ஸ் ஆ) சே (Say)
இ) தொன்மையது ஈ) வேலைவாய்ப்பு
**[விடை: அ) கீன்ஸ்]**

11. **வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து ________ ஆகும்.** *[PTA-6]*
அ) தொகுத் தேவை
ஆ) தொகு அளிப்பு
இ) விளைவுத் தேவை
ஈ) இறுதிநிலை நுகர்வு விருப்பு
**[விடை: இ) விளைவுத் தேவை]**

12. **தொகுத் தேவையின் கூறு ________ ஆகும்.** *[Aug-2021]*
அ) தனிநபர் தேவை
ஆ) அரசுச் செலவு
இ) ஏற்றுமதி மட்டும்
ஈ) இறக்குமதி மட்டும்
**[விடை: ஆ) அரசுச் செலவு]**

13. **மொத்த அளிப்பு சமம் ________.** *[PTA-1; Aug-2021]*
அ) C+I+G ஆ) C+S+G+(X–M)
இ) C+S+T+(X–M) ஈ) C+S+T+Rf
**[விடை: ஈ) C+S+T+Rf]**





orders@surabooks.com PH:9600175757 / 8124301000
www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

அத்தியாயம் 5

# பணவியல் பொருளியல்

## பொருளடக்கம்


5.1 அறிமுகம்
5.2 பணம்
5.2.1 பொருள்
5.2.2 இலக்கணம்
5.2.3 பணத்தின் பரிணாம வளர்ச்சி
5.2.4 பணத்தின் பணிகள்
5.3 பண அளிப்பு
5.4 பண அளவு கோட்பாடுகள்
5.5 பணவீக்கம்
5.5.1 பணவீக்கம் என்பதன் பொருள்
5.5.2 பணவீக்கத்தின் வகைகள் பணவீக்க வேகத்தின் அடிப்படை
5.5.3 பணவீக்கத்திற்கான காரணங்கள்
5.5.4 பணவீக்கத்தின் விளைவுகள்
5.5.5 பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்
5.6 பணவாட்டம், மீள்பண வீக்கம் மற்றும் தேக்க வீக்கம்
5.7 வணிகச் சுழற்சி
5.7.1 வணிகச் சுழற்சியின் பொருள்
5.7.2 வாணிபச் சுழற்ச்சியின் கட்டங்கள்.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# கருத்துப் படம்




பணவியல் பொருளியல்

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



| | | |
|---|---|---|
| **பணவியல் முறைகள்** | : | பணவியல் முறைகள் நாட்டின் மைய வங்கியினால் அமல்படுத்தப்படும் முறையாகும். |
| **பணவாட்டத்தின் இயல்பு** | : | விலைவாசி குறைத்தல், குறைந்த பண அளிப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆகியன பணவாட்டத்தின் முக்கிய இயல்புகள் ஆகும். |
| **மீள் பணவீக்கம்** | : | வேலைவாய்ப்பினை பாதிக்காத வகையில் கடன்களை கட்டுப்படுத்துவதன் மூலமும் பணவீக்கத்தினை குறைப்பது மீள் பணவீக்கம் ஆகும். |
| **தேக்க வீக்கம்** | : | தேக்க வீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலையும், வேலை வாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும். |
| **வணிகச் சுழற்சி** | : | வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம் போன்றவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் அலைவுகளே வணிகச் சுழற்சி ஏற்படுகிறது. |
| **பூரிப்பு கட்டம் (BOOM)** | : | நீண்டகால இயல்பான வளர்ச்சி நிலைக்கு மேல் பொருளாதார நடவடிக்கைகள் உயர்ந்து முழு வேலைவாய்ப்பு நிலையை தாண்டுவது வணிகச் சூழலின் வளர்ச்சி கட்டம் ஏற்படுகிறது. |
| **பின்னிறக்க (Recession)** | : | வளர்ச்சியின் உச்சத்தில் பூரிப்பை எய்திய பொருளியல் நடவடிக்கைகள் அடுத்ததாக கீழ்நோக்கி திரும்புகின்றன பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடவடிக்கைகள் பின்னோக்கி திரும்புவதை பின்னிறக்கம் என்கிறோம். |
| **மந்தம் (Depression)** | : | மந்த காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்குகீழ் மிகத் தீவிரமாக குறைந்து வரும். நிறுவனங்கள் நட்டமடைவதும், மூடப்படுவதும் இதன் இயல்பாகும். |
| **மீட்சி (Recovery or Revival)** | : | மந்தத்திலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும். |

# இலக்கணங்கள்

| | | |
|---|---|---|
| **மில்டன் பிரெடுமேனின் பணவீக்க இலக்கணம்** | : | "பணவீக்கம் சட்டபூர்வமற்ற வரிவிதிப்பாகும்". |
| **வாக்கரின் பணத்தின் இலக்கணம்** | : | "பணம் எதைச் செய்கிறதோ, அதுதான் பணம்". |
| **கிரௌதரின் பணத்தின் இலக்கணம்** | : | "பரிவர்த்தனைகளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக்கருவியாகவும், மதிப்பளவை மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினைச் செய்யும் ஒன்றாகவும் இருப்பது பணம் ஆகும்". |
| **ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டின் இலக்கணம்** | : | ஃபிஷர் ஒரு நாட்டில் குறிப்பிட்ட கால அளவில் மொத்த பண அளிப்பு (MV) என்பது நாட்டில் வாங்க – விற்கப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் அளவின் பண மதிப்பிற்கு (PT) சமமாக இருக்கும் என்று குறிப்பிடுகிறார். $MV = PT$ |
| **கீன்ஸின் ரொக்க இருப்பு கூற்று** | : | "கீன்ஸின் கூற்றுப்படி, மக்களின் ரொக்க விருப்பத்தினை (K) பணவியல் அமைப்புகள் மாற்றயியலாது. ஆகவே, பணத்தின் அளவை (n) நெறிப்படுத்துவதன் மூலம் விலைவாசியை கட்டுப்படுத்தி, பணத்தின் மதிப்பினை நிலைப்படுத்தலாம்" என்கிறார். |
| **கோல்பர்னனின் பணவீக்க இலக்கணம்** | : | "குறைந்த அளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்தும் நிலை". |
| **கிரிகெரியின் பணவீக்க இலக்கணம்** | : | "வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண குறைவு நிலையாகும்". |



www.surabooks.com



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



| | | |
|---|---|---|
| **மீள் பணவீக்கம் வரையறு** | : | "வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தை திருப்பும் செயல்முறையே மீள் பணவீக்கம் ஆகும்". |
| **வாணிபச் சூழலின் இலக்கணம்** | : | J.M. கீன்ஸின் கூற்றுப்படி, "உயர்கின்ற விலைகளையும், குறைந்த வேலையற்றோர் சதவிகிதத்தையும் கொண்ட நல்ல வாணிபக் காலங்களையும், குறைகின்ற விலைகளையும் மிகுக்கின்ற வேலையில்லாத் திண்டாட்ட சதவிகிதத்தையும் கொண்ட கெட்ட வாணிபக் காலங்களையும் உள்ளடக்கியது வாணிபச் சூழல் ஆகும்". |
| **கிரௌத்தரின் பணவீக்க இலக்கணம்** | : | "பணத்தின் மதிப்பு குறைவதும் விலைகள் உயர்ந்து கொண்டு செல்வதுமான ஒரு நிலையே பணவீக்கம்" என்று கிரௌத்தர் வரையறுத்துள்ளார். |
| **சாப்பிரோவின் பணவீக்க இலக்கணம்** | : | "குறிப்பிடும்படியான தொடர்ச்சியான விலைமட்ட உயர்வை குறிக்கும்". என்று சாப்பிரோ கூறுகிறார். |
| **ஹாரி ஜான்சனின் கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்க இலக்கணம்** | : | "விலைமட்டம் உயராமலேயே பணவீக்கம் தோன்றும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதற்கு கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கம் என்று ஹாரி ஜான்சன் கூறுகிறார். |
| **கிரௌதரின் பணவாட்ட இலக்கணம்** | : | "பண மதிப்பு உயர்ந்து கொண்டே செல்வதை, அல்லது பண்டங்களின் விலை குறைந்து கொண்டே செல்வதை பணவாட்டம்" என்று கிரௌத்தர் கூறுகிறார். |
| **எட்வர்டு சாபிரோவின் பணக்கொள்கை பற்றிய இலக்கணம்** | : | "பணக் கொள்கை என்பது பொருளாதார கொள்கையின் நோக்கங்களை அடைய பண அளிப்பு மற்றும் பணத்தை உற்பத்தி செய்ய ஆகும் செலவுகளை கட்டுப்படுத்த மைய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும்" என்று எட்வர்டு சாபிரோ கூறியுள்ளார். |

# சூத்திரங்கள்

- ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டின் பொது வடிவச் சமன்பாடு = MV = PT
- பண அளிப்பு = பணத் தேவை
- ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு விரிவானச் சமன்பாடு

  $$PT = MV + M^1 V^1 \text{ அல்லது } P = \frac{MV + M^1 V^1}{T}$$

- கேம்பிரிட்ஜ் அணுகுமுறை :

  மார்ஷலின் பணி அளவுக் கோட்பாட்டின் சமன்பாடு = M = KPY

- கீன்ஸின் பண அளவுக் கோட்பாட்டின் சமன்பாடு :

  $$n = PK \text{ (அல்லது) } P = \frac{n}{K}$$

- கீன்ஸின் பண அளவுக் கோட்பாட்டின் விரிவாக்கச் சமன்பாடு :

  $$n = P(K + rK^1)\ MY ; \quad YJP = \frac{n}{(K' + rK')}$$

அத்தியாயம் 5



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# புத்தக வினாக்கள்

## மாதிரி வினாக்கள்

### பகுதி – அ

**சரியான விடையை தெரிவு செய்க :**

**1. ஆர் பி ஐ - ன் தலைமையகம் அமைந்துள்ள இடம்** *[Govt. MQP -2019; QY-2019; Mar-2020]*

அ) டில்லி ஆ) சென்னை
இ) மும்பை ஈ) பெங்களூரு

**[விடை: இ) மும்பை]**

**2. பணம் என்பது**

அ) உள்ளடக்க மதிப்பு இருந்தால் ஏற்றுக்கொள்ளப்படுவது
ஆ) நிலையான வாங்கும் சக்தியை கொண்டது
இ) உள்ளவற்றில் அதிக நீர்மைத் தன்மை கொண்ட சொத்து ஆகும்.
ஈ) வளங்களை பங்கிட்டுக்கொள்ள தேவைப்படுகிறது.

**[விடை: இ) உள்ளவற்றில் அதிக நீர்மைத் தன்மை கொண்ட சொத்து ஆகும்]**

**3. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது**

அ) மைய பணவியல் அமைப்பு
ஆ) மாநில அரசு
இ) மைய அரசு
ஈ) வங்கிகள்

**[விடை: அ) மைய பணவியல் அமைப்பு]**

**4. M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்** *[PTA-2]*

அ) அஞ்சலக அனைத்து வைப்புகள்
ஆ) அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்
இ) வங்கியின் கால வைப்புகள்
ஈ) காகிதப்பணம்

**[விடை: ஆ) அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்]**

**5. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு**

அ) 1908 ஆ) 1910
இ) 1911 ஈ) 1914

**[விடை: இ) 1911]**

**6. MV என்பது** *[Aug-2021]*

அ) பணத் தேவை
ஆ) சட்டபூர்வ பண அளிப்பு
இ) வங்கிப் பண அளிப்பு
ஈ) மொத்த பண அளிப்பு

**[விடை: ஆ) சட்டபூர்வ பண அளிப்பு]**

**7. பணவீக்கம் என்பது** *[QY-2019; Aug-2021]*

அ) விலைகள் அதிகரிப்பு
ஆ) விலைகள் குறைதல்
இ) பணமதிப்பு அதிகரிப்பு
ஈ) விலைகள் மாறாதிருத்தல்

**[விடை: அ) விலைகள் அதிகரிப்பு]**

**8. _______ பணவீக்கம் பணமதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுத்துகிறது.** *[PTA-3]*

அ) தவழும் ஆ) நடக்கும்
இ) ஓடும் ஈ) உயர்

**[விடை: ஈ) உயர்]**

**9. கூலி மற்றும் மூலப்பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலைமட்டம் அதிகரிப்பது _______ பணவீக்கம் ஆகும்.**

அ) செலவு உந்து ஆ) தேவை இழுப்பு
இ) ஓடும் ஈ) தாவும்

**[விடை: அ) செலவு உந்து]**

**10. பணவீக்கத்தின்பொழுது பயனடைபவர்கள் யார்?** *[PTA-1; Sep-2020]*

அ) கடன் பெற்றோர்கள்
ஆ) கடன் வழங்கியோர்
இ) கூலி மற்றும் சம்பளம் பெறுவோர்
ஈ) அரசு

**[விடை: அ) கடன் பெற்றோர்கள்]**

**11. _______ என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.** *[PTA-3]*

அ) எதிர் பணவீக்கம் ஆ) பணவாட்டம்
இ) தேக்கவீக்கம் ஈ) மந்தம்

**[விடை: அ) எதிர் பணவீக்கம்]**

**12. தேக்க வீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது** *[HY-2019; PTA-6]*

அ) தேக்கம் ஆ) வேலைவாய்ப்பு
இ) உற்பத்தி ஈ) விலை

**[விடை: அ) தேக்கம்]**



www.surabooks.com



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



13. **பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை _______ அழைக்கின்றோம்.**
அ) பூரிப்பு ஆ) பின்னிறக்கம்
இ) மீட்சி ஈ) வணிகச்சுழற்ச்சி
**[விடை: ஈ) வணிகச்சுழற்ச்சி]**

14. **மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்.** *[PTA-1]*
அ) உயர்ந்தபட்சமாக
ஆ) மிக மோசமாக
இ) மிக குறைந்தபட்சமாக
ஈ) மிக நல்ல நிலையில்
**[விடை: இ) மிக குறைந்தபட்சமாக]**

15. **"பரிவர்த்தனைகளில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடையீட்டுக் கருவியாகவும், அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம்" என்ற இலக்கணத்தை வழங்கியவர்**
அ) கிரௌதர்
ஆ) பிகு
இ) வாக்கர்
ஈ) பிரான்சிஸ்டி பேக்கான்
**[விடை: அ) கிரௌதர்]**

16. **பற்று அட்டை என்பது _______ உதாரணம் ஆகும்.**
அ) கட்டளைப்பண ஆ) காகிதப்பண
இ) நெகிழி பண ஈ) கடன் பண
**[விடை: இ) நெகிழி பண]**

17. **:பிஷரின் பண அளவுக் கோட்பாடு பணத்தின் இந்த பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது.**
அ) மதிப்பளவு
ஆ) மதிப்பின் நிலைக்கலன்
இ) பரிவர்த்தனை கருவி
ஈ) வருங்கால செலுத்துதல்களுக்கான அடிப்படை
**[விடை: இ) பரிவர்த்தனை கருவி]**

18. **MV = PT என்ற சமன்பாட்டில், V என்பது** *[PTA-2]*
அ) வாணிபத்தின் அளவு
ஆ) பணத்தின் சுழற்ச்சி வேகம்
இ) ரொக்கப் பணத்தின் அளவு
ஈ) வங்கி மற்றும் கடன் பண அளவு
**[விடை: ஆ) பணத்தின் சுழற்ச்சி வேகம்]**

19. **விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது அழைக்கப்படுவது** *[PTA-4]*
அ) தாவும் பணவீக்கம்
ஆ) மிதமான பணவீக்கம்
இ) உயர் பணவீக்கம் ஈ) பணவாட்டம்
**[விடை: ஆ) மிதமான பணவீக்கம்]**

20. **_______ பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது.** *[PTA-5]*
அ) நடக்கும் ஆ) ஓடும்
இ) தவழும் ஈ) தாவும்
**[விடை: இ) தவழும்]**

## பகுதி – ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதிலளிக்கவும் :**

21. **பணத்தின் இலக்கணம் வரைக.** *[QY-2019; PTA-2]*

விடை. "பணம் எதைச் செய்கிறதோ, அதுதான் பணம்" என்று வாக்கர் கூறுகிறார்.

(அல்லது)

"பரிவர்த்தனைகளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக் கருவியாகவும், மதிப்பளவை மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினைச் செய்யும் ஒன்றாகவும் இருப்பது பணம் ஆகும்" என்று கிரௌதர் கூறுகிறார்.

22. **பண்டமாற்று என்றால் என்ன?** *[PTA-5]*

விடை. (i) பண்டங்கள் மற்றும் பணிகளை நேரடியாக பரிமாற்றிக் கொள்வது பண்டமாற்று முறை ஆகும்.

(ii) பிறரிடம் உள்ள தங்களுக்கு தேவையான பொருட்களை அல்லது பணிகளை பெறும்பொருட்டு தங்களிடம் உள்ள பொருட்களை அல்லது பணிகளை மாற்றாக வழங்குவது பண்டமாற்று முறையாகும்.

23. **பண்டப்பணம் என்றால் என்ன?**

விடை. (i) பண்டப்பணம் என்பது அதன் தயாரிக்கப்பட்ட பண்டத்திலிருந்து பெறப்படுகிறது.

(ii) பண்டத்தின் உபயோகத்தை பொருத்து அதன் மதிப்பு தீர்மானிக்கப்படுகிறது.

24. **பொன் திட்டம் என்றால் என்ன?** *[HY-2019; PTA-1]*

விடை. (i) ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது.

(ii) ஒரு பண அலகின் வாங்குத்திறன் அப்பொன் பணத்தின் எடை அளவுக்கு சமமாக நிர்வகிக்கப்பட்டு வந்தது.



www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**25. நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.** *[QY-2019; Mar-2020]*

**விடை.** (i) அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பணம் நெகிழிப் பணமாகும்.

(ii) நிதிப் பொருட்களின் வரிசையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தோற்றமாகும்.

(iii) நெகிழிப் பணம் நடைமுறையிலுள்ள காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றாகும்.

(iv) தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டவையே நெகிழி பணம் என்றழைக்கப்படுகிறது.

(v) எ.கா : ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை போன்றவை ஆகும்.

**26. பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக.**

**விடை.** "குறைந்த அளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்தும் நிலை" என்று கோல்பர்ன் கூறுகிறார்.

(அல்லது)

"வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண குறைவு நிலையாகும்" என்று கிரிகெரி இலக்கணம் வகுத்துள்ளார்.

**27. தேக்கவீக்கம் என்றால் என்ன?** *[Govt. MQP -2019]*

**விடை.** தேக்க வீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலையும், வேலை வாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்.

## பகுதி - இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடையளி :**

**28. உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக.**

**விடை. உலோகத் திட்டம் (Metallic standard) :**

(i) பண்டமாற்று முறை மற்றும் பண்டப் பண முறைக்குப் பின் நவீன பண முறைகள் தோன்ற ஆரம்பித்தது. அவற்றில் முதன்மையானது உலோகப் பணத்திட்டம் ஆகும்.

(ii) உலோகத்திட்டத்தில் தங்கம், வெள்ளி போன்ற ஏதாவது ஒரு உலோகம் பணத்தின் மதிப்பினை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்பட்டது.

(iii) உலோகத் திட்டத்தின் கீழ் உலோக நாணயங்கள் பணமாக உருவாக்கப்பட்டன.

(iv) முழு நிலையுடைய சட்டமுறை பணமாக இருந்து வந்தது.

(v) அந்நாணயங்களில் முக மதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாக இருந்தன.

**29. பண அளிப்பு என்றால் என்ன?** *[PTA-4]*

**விடை.** (i) ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்தப் பண அளவே பண அளிப்பு ஆகும்.

(ii) ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டின் புழக்கத்தில் உள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பாகும்.

(iii) வட்டி விகிதம், விலைவாசி போன்றவற்றை நிர்ணயிப்பதில் பண அளிப்பு முக்கியப் பங்கு வகிக்கின்றது.

(iv) குறிப்பிட்ட காலத்தில் பண அளிப்பு நிலைக் (stock) கருத்தாகவும் ஒரு கால இடைவெளியில் ஓட்டக் (flow) கருத்தாகவும் உள்ளது.

**30. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?** *[Govt. MQP -2019; HY-2019; PTA-2; Mar-2020; Aug-2021]*

**விடை.** (i) **ரொக்க வைப்பு விகிதம் (Cash Deposit Ratio) :**

இது பொதுமக்கள் கையில் வைத்திருக்கும் பணம் / வங்கி வைப்புக்களில் உள்ள பணம் என்ற விகிதத்தை குறிக்கும்.

(ii) **ரொக்க இருப்பு வைப்பு விகிதம் (Reserve Deposit Ratio - RDR) :**

"வங்கி தனது பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருக்கும் இருப்பு மற்றும் மைய வங்கியில் வைத்திருக்கும் ரொக்க வைப்புகள்" என்ற விகிதம்.

(iii) **ரொக்க இருப்பு விகிதம் (Cash Reserve Ratio CRR) :**

"வங்கியில் வைப்புகளில் குறைந்தபட்சமாக மைய வங்கியில் வைக்க வேண்டிய அளவு / வங்கிகளில் செலுத்தப்பட்ட மொத்த வைப்புகள்" என்ற விகிதம் ஆகும்.

(iv) **சட்டபூர்வ நீர்மை விகிதம் (Statutory Liquidity - SLR) :**

"வணிக வங்கிகள் வைத்திருக்கும் நீர்மை தன்மையிலான சொத்துக்கள் / வங்கிகளில் இருக்கும் மொத்த கேட்பு மற்றும் கால வைப்புகள்" என்ற விகிதம் ஆகும்.

**31. பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.**

**விடை. பணவீக்கத்தின் வகைகள் :** *[PTA-6]*

(i) **தவழும் பணவீக்கம் :**

1. தவழும் பணவீக்கம் மிக குறைவான மற்றும் எளிமையான விகிதத்தில் பணவீக்க விகிதம் இருப்பதாகும்.

2. நீண்ட காலத்தில் விலைவாசி உயர்வதை மக்கள் எளிதாக உணர முடியாத அளவில் இருக்கும் பணவீக்கமே தவழும் பணவீக்கம் எனப்படும். இது மிதமான பணவீக்கம் எனப்படுகிறது.





orders@surabooks.com PH:9600175757 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**(ii) நடக்கும் பண வீக்கம் :**

பணவீக்கம் மிதமான வேகத்தில் ஒற்றை இலக்கத்தில், அதாவது 3% அல்லது 9% இருந்தால் அது நடக்கும் அல்லது நகரும் பணவீக்கம் என்றழைக்கப்படுகிறது.

**(iii) ஓடும் பணவீக்கம் :**

ஆண்டு பணவீக்க விகிதம் 10 முதல் 20 சதவிகிதத்திற்குள் இருந்தால் அது ஓடும் பணவீக்கம் எனப்படுகிறது.

**(iv) தாவும் பணவீக்கம் :**

தாவும் பணவீக்கம் அல்லது உயர் பணவீக்கம் என்பது சமாளிக்க முடியாத அளவிற்கு இரண்டு அல்லது மூன்று இலக்கு சதவிகிதத்தில் உள்ள பணவீக்கம் ஆகும்.

**32. தேவை - இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.** *[QY-2019; PTA-3]*

விடை. (i) **தேவை – இழுப்பு பணவீக்கம் :**

அளிப்பு நிலையாக உள்ள நிலையில், பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் பொழுது விலைவாசி உயருகின்றன. இதுவே தேவை – இழுப்பு பணவீக்கம் என்றழைக்கப்படுகிறது.

(ii) **செலவு – உந்து பணவீக்கம் :**

1. உற்பத்தியில் மூலப்பொருட்கள் மற்றும் இதர இடுபொருட்களுக்கான செலவு உயருகின்றபொழுது உற்பத்தி செலவு கூடி பொருட்களுக்கான விலை அதிகரிக்கின்றது.
2. ஆகையால் இவ்வகை பணவீக்கம் செலவு – உந்து பணவீக்கம் எனப்படுகிறது.

**33. பண மதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.** *[PTA-1]*

விடை. கேம்பிரிட்ஜ் அணுகுமுறை (ரொக்க இருப்பு அணுகுமுறை)

(i) **மார்ஷலின் சமன்பாடு :**

மார்ஷலின் சமன்பாடு பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

$M = KPY$ இங்கு,

M = பணத்தின் அளவு.

Y = சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானம்

P = பொது விலைமட்டம்

K = மக்கள் தங்கள் கையில் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும், சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானத்தின் ஒரு பகுதி.

(ii) **கீன்ஸின் சமன்பாடு :**

$n = pk$ (or) $p = n/k$

n = மொத்த பண அளிப்பு

p = நுகர்ச்சி பொருட்களின் விலைமட்டம்.

k = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் வருமானத்தின் ஒரு பகுதி நுகர்ச்சி பொருட்களின் அலகுகள்.

**34. மீள் பணவீக்கம் பற்றி விளக்குக.** *[HY-2019]*

விடை. (i) வேலைவாய்ப்பினை பாதிக்காத வகையில் கடன்களை (வங்கி கடன் தவணை முறை கொள்முதல் முறைகளை) கட்டுப்படுத்துவதன் மூலமும் பணவீக்கத்தினை குறைத்து வருவது மீள் பணவீக்கம் ஆகும்.

(ii) மீள் பணவீக்கம் என்பதனை பின்வருமாறு வரையறுக்கலாம்.

(iii) வேலை வாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும் உற்பத்தி அளவுகள் குறையாமலும் பண வீக்கத்தை திருப்பும் செயல் முறையே மீள் பணவீக்கம் ஆகும்.

## பகுதி – ஈ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

**35. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.** *[QY-2019; PTA-2, 5; Aug-2021]*

விடை. பண அளவுக் கோட்பாடுகள் பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்பிற்கும் இடையேயான தொடர்பினை எடுத்துரைப்பதாகும்.

**(அ) ஃபிஷரின் பண அளவு கோட்பாடு :**

(i) பண அளவுக் கோட்பாடு என்பது மிக பழமையான கோட்பாடு ஆகும்.

(ii) இர்விங் ஃபிஷர் தனது கோட்பாட்டினை "பரிவர்த்தனைக்கான சமன்பாடு" என்று கணித சமன்பாட்டின் வாயிலாக வழங்கியுள்ளார்.

(iii) இச்சமன்பாட்டின் பொது வடிவம் $MV = PT$ ஆகும். இங்கு,

M = மொத்த (காகித) பண அளவு

V = பணத்தின் சுழற்சி வேகம்

P = பொது விலை மட்டம்

T = வாணிபத்தின் அளவு

(iv) ஃபிஷர் ஒரு நாட்டில் குறிப்பிட்ட கால அளவில் மொத்த பண அளிப்பு (MV) என்பது நாட்டில் வாங்க விற்கப்படும் பொருள்கள் மற்றும் பணிகளின் அளவின் பண மதிப்பிற்கு (அதாவது மொத்த பணத்தேவைக்கு) (PT) சமமாக இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

$MV = PT$

அத்தியாயம் 5



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# PTA வினாக்கள் மற்றும் விடைகள்

## 1 மதிப்பெண்

**1. கொடுக்கப்பட்ட கூற்றிற்க்கும், காரணத்திற்கும் தகுந்த விடையினை தேர்ந்தெடுக்க.** *[PTA-6]*

**கூற்று : பொருட்கள் மற்றும் பணிகளை, பணமானது மதிப்பளவை செய்கிறது.**

**காரணம் : அனைத்துப் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பை பண அலகில் விலையாக வெளிப்படுத்தாது.**

அ) கூற்றும், காரணமும் சரியானது ; காரணம் கூற்றினுடைய சரியான விளக்கமாகும்

ஆ) கூற்றும், காரணமும் சரியானது; ஆனால் காரணம் கூற்றினுடைய சரியான விளக்கமல்ல

இ) கூற்று தவறானது; ஆனால் காரணம் சரியானது

ஈ) கூற்று சரியானது; ஆனால் காரணம் தவறானது

**[விடை: ஈ) கூற்று சரியானது; ஆனால் காரணம் தவறானது]**

## 2 மதிப்பெண்கள்

**1. 1. காகிதப்பணம் 2. நாணயங்கள் - இவை யாரால் வெளியிடப்படுகிறது?** *[PTA-3]*

விடை. (i) இந்தியாவில் காகிதப் பணங்கள் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவாலும்,

(ii) நாணயங்கள் மத்திய அரசின் நிதித்துறையாலும் வெளியிடப்படுகின்றது.

**2. பற்றாக்குறை நிதி ஆக்கம், பண வீக்கத்திற்கு வழி வகுக்கிறது. நிரூபிக்கவும்.** *[PTA-4]*

விடை. தொடர்ந்து பொதுச் செலவுகள் கூடிவருவதால், அரசின் வரவு-செலவு திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படுகிறது. இப்பற்றாக்குறையை ஈடு செய்ய கடன் வாங்குதல், புதிய காகிதப் பணம் அச்சடித்தல் என பற்றாக்குறை நிதியாக்க முறைகளில் அரசு ஈடுபடுகிறது. இதன் விளைவாக தொகு அளிப்பைவிட தொகு தேவையின் அளவு அதிகரித்து, விலைவாசி உயர்ந்து பணவீக்கம் ஏற்படுகிறது.

**3. "மெய்நிகர் பணம்" - சிறுகுறிப்பு வரைக.** *[PTA-6]*

விடை. மைய வங்கியைச் சாராமல் பண பெருக்கத்தை சீர் செய்தல் மற்றும் நிதி மாற்றத்தை சரிபார்த்தல் போன்ற சுதந்திரம் கொண்ட டிஜிட்டல் நாணயங்கள் மெய்நிகர் பணமாகும்.

# அரசு தேர்வு வினாக்கள் மற்றும் விடைகள்

## 1 மதிப்பெண்

**1. எது பணத்தின் முதன்மைப் பணி?** *[Mar-2020]*

(அ) கடனுக்கான அடிப்படை

(ஆ) பணம் ஒரு பரிவர்த்தனை கருவி

(இ) பணம் ஒரு மதிப்பு நிலைகலன்

(ஈ) பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை

**[விடை: ஆ) பணம் ஒரு பரிவர்த்தனை கருவி]**

**2. சி.ஆர்.ஆர் (CRR) என்பதன் விரிவாக்கம் :** *[Sep-2020]*

(அ) Capital Reserve Ratio

(ஆ) Credit Reserve Ratio

(இ) Cash Reserve Ratio

(ஈ) Corporate Reserve Ratio

**[விடை: இ) Cash Reserve Ratio]**

## 3 மதிப்பெண்கள்

**1. வரிவீக்கம் (Taxflation) மற்றும் காகித பணவீக்கம் என்றால் என்ன?** *[Sep-2020]*

விடை. **வரிவீக்கம் :** மறைமுக வரிகளான கலால்வரி, சுங்கவரி மற்றும் விற்பனை வரி ஆகியவற்றில் ஏற்படும் உயர்வு காரணமாக விலைவாசி உயர்ந்து செல்வது வரி தூண்டல் பணவீக்கம் எனப்படுகிறது. உதாரணத்திற்கு பெட்ரோல் மற்றும் டீசல் பொருட்கள் மீதான வரி உயர்வு பணவீக்கத்தை தூண்டுகிறது. இவ்வகையான பணவீக்கத்தை வரிவீக்கம் எனவும் அழைக்கிறோம்.

**காகித பணவீக்கம் :** அளவுக்கு அதிகமான காகிதப் பணத்தை மையவங்கி பயன்பாட்டிற்கு விடுவிக்கும்பொழுது ஏற்படும் விலைவாசி உயர்வு காகிதப் பணவீக்கம் எனப்படுகிறது.



www.surabooks.com



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



### 5 மதிப்பெண்கள்

**1. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை விவரிக்கவும்.** *[Govt. MQP -2019]*

**விடை.** கீன்ஸ் மற்றும் மில்டன் ப்ரீட்மேன் பணவீக்கத்தினை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கருத்துக்களின் அடிப்படையில் மூன்றாக பிரிக்கலாம் என்கின்றனர். அவைகள்

1. பணவியல் முறைகள்
2. நிதியியல் முறைகள் (J.M. கீன்ஸ்) மற்றும்
3. இதர முறைகள்

1. **பணவியல் முறைகள் :** பணவியல் முறைகள் நாட்டின் மைய வங்கியினால் அமல்படுத்தப்படும் முறையாகும். அவைகள் :
   - (i) வங்கி விகிதத்தை உயர்த்துதல்,
   - (ii) வெளிச்சந்தையில் அரசு பத்திரங்களை விற்றல்,
   - (iii) ரொக்க இருப்பு விகிதத்தை உயர்த்துதுல் மற்றும் சட்டபூர்வ நீர்மை விகிதத்தை உயர்த்துதல்.
   - (iv) நுகர்வோர் கடனை கட்டுப்படுத்துதல்,
   - (v) கடன் விளிம்பு நிலையினை உயர்த்துதல்,
   - (vi) மீள் வாங்கல் விகிதம் (Repo Rate) மற்றும் திருப்ப மீள் வாங்கல் விகிதம் (Reverse Repo Rate) ஆகியவற்றினை உயர்த்துதுல் ஆகும்.

2. **நிதியியல் நடவடிக்கைகள் :** பணவீக்க சூழ்நிலையை கட்டுப்படுத்துவதில் நிதிக் கொள்கையும் அதன் கருவிகளும் முக்கிய பங்கு வகிப்பது உணரப்பட்டுள்ளது. பணவீக்கத்திற்கு எதிரான நிதியியல் நடவடிக்கைகளாவன அரசு செலவினங்களை குறைப்பது, பொதுமக்களிடமிருந்து கடன்களை பெறுவது மற்றும் வரிவிதிப்புகளை விரிவாக்குவது.

3. **இதர நடவடிக்கைகள் :** இதர நடவடிக்கைகள் குறுகியகால நடவடிக்கைகள் மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளன.

# கூடுதல் வினாக்கள் மற்றும் விடைகள்

## பகுதி - அ

**I. சரியான விடையைத் தெரிவு செய்க:**

**1 மதிப்பெண்**

**1. நீர்மை தன்மை கொண்ட சொத்து**

அ) தங்கம் ஆ) வெள்ளி
இ) பணம்
ஈ) இவற்றில் எதுவுமில்லை

**[விடை: இ) பணம்]**

**2. பணவாட்டம் என்றால் ______.**

அ) விலை ஏற்றம்
ஆ) விலை இறக்கம்
இ) பண மதிப்பு அதிகரித்தல்
ஈ) விலை மாறாமல்

**[விடை: ஆ) விலை இறக்கம்]**

**3. பண வீக்கத்தின்பொழுது பயன் பெறுபவர் யார்?**

அ) கடனீந்தோர்
ஆ) கூலி மற்றும் சம்பளம்
இ) அரசு
ஈ) வணிகம் புரிபவர்

**[விடை: ஈ) வணிகம் புரிபவர்]**

**4. விலை அதிகமாக உயரும்போது அதை ______ என்கிறோம்.**

அ) தாவும் பணவீக்கம்
ஆ) மிதமான பணவீக்கம்
இ) மிக வேக பணவீக்கம்
ஈ) பணவாட்டம்

**[விடை: இ) மிக வேக பணவீக்கம்]**

**5. பணவீக்கம் சட்டபூர்வமற்ற வரிவிதிப்பு எனக் கூறியவர் ______.**

அ) வாக்கர் ஆ) ஆடம்ஸ்மித்
இ) மில்டன் பிரெடுமேன்
ஈ) ஆல்பிரட் மார்ஷல்

**[விடை: இ) மில்டன் பிரெடுமேன்]**

**6. ______ என்பவரால் பண்டமாற்று முறை தோற்றுவிக்கப்பட்டது.**

அ) மெசபடோமியா கூட்டத்தினர்
ஆ) பாபிலோனியர்கள்
இ) (அ) மற்றும் (ஆ)
ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

**[விடை: அ) மெசபடோமியா கூட்டத்தினர்]**

**7. பணம் ஒரு நீர்மைத் தன்மை கொண்ட ______.**

அ) வருவாய் ஆ) முதல்
இ) (அ) மற்றும் (ஆ)
ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

**[விடை: அ) வருவாய்]**





orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



8. _______ உள்ள மொத்த பண அளவே பண அளிப்பு ஆகும்.
அ) உலகத்தில் ஆ) மாநிலத்தில்
இ) நாட்டில்
ஈ) பொருளாதாரத்தில்
[விடை: ஈ) பொருளாதாரத்தில்]

9. இந்தியாவின் பண வெளியீடு உரிமை _______ க்கு உண்டு.
அ) மாநில வங்கி ஆ) RBI
இ) உலக வங்கி ஈ) SBI
[விடை: ஆ) RBI]

10. இந்திய நாணயத்தின் முத்திரை எந்த ஆண்டு நடைமுறைக்கு வந்தது.
அ) ஜுலை 15, 2010 ஆ) ஜுலை 16, 2010
இ) ஜுன் 15, 2010 ஈ) ஜுன் 16, 2010
[விடை: அ) ஜூலை 15, 2010]

11. இந்தியா அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஐரோப்பா நாடுகளுக்குபின் தனி பணக் குறியீடு கொண்ட _______ நாடாக விளங்குகின்றது.
அ) 4 ஆ) 6
இ) 5 ஈ) 7
[விடை: இ) 5]

12. 1588 ல் தொடங்கப்பெற்ற பிஷரின் பண அளவுக் கோட்பாடு யாரால் முன் மொழியப்பட்டது.
அ) டாவன்ஷட்டி ஆ) மால்தஸ்
இ) ரிக்கார்டோ
ஈ) ஹறி டெக்டர் ஒய்ட்
[விடை: அ) டாவன்ஷட்டி]

13. "பணத்தின் வாங்கும் திறன்" என்ற புத்தகத்தின் வெளியீட்டை 1911ல் வெளியிட்டவர் _______.
அ) ஜே.எம். கீன்ஸ் ஆ) இர்வின் பிஷர்
இ) ஆடம் ஸ்மித் ஈ) ரிகார்டோ
[விடை: அ) ஜே.எம். கீன்ஸ்]

14. பிஷரால் உருவாக்கப்பட்ட பொதுவான சமன்பாடு _______.
அ) MV = PT ஆ) M = KPY
இ) $N = \frac{P}{K}$
ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
[விடை: அ) MV = PT]

15. ஒரு பொருளுக்கு பதிலாக மற்றொரு பொருளை பெறுவது (பணம் இல்லாமல்) _______ என்று அழைக்கப்படுகிறது.
அ) பண அளிப்பு ஆ) பண வீக்கம்
இ) பண வாட்டம் ஈ) பண்டமாற்று
[விடை: ஈ) பண்டமாற்று]

16. வணிகச் சூழல் _______ வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.
அ) 1 ஆ) 2
இ) 3 ஈ) 4
[விடை: ஈ) 4]

17. மார்ஷலின் சமன்பாடு _______ என்று வழங்கப்பட்டுள்ளது.
அ) M = KPY ஆ) MV = PT
இ) n = PK
ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
[விடை: அ) M = KPY]

18. வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண குறைவு நிலையாகும்.
அ) கோல்பரின் ஆ) கிரிகெரி
இ) ரிக்கார்டோ ஈ) மால்தஸ்
[விடை: ஆ) கிரிகெரி]

19. எந்த பழங்குடியினரால் பண்டமாற்று முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) மெசபடோமியா ஆ) போயனீசியர்கள்
இ) பாபிலோனியர்கள் ஈ) ஜராவர்கள்
[விடை: அ) மெசபடோமியா]

20. கடன்கள் மற்றும் தவணைமுறைக் கொள்முதல் முறைகளை கட்டுப்படுத்துவதன் மூலம் _______ஐ குறைத்து வருவது மீள் பணவீக்கமாகும்.
அ) பண வாட்டம் ஆ) பண வீக்கம்
இ) தேக்க வீக்கம் ஈ) வாட்டம்
[விடை: ஆ) பண வீக்கம்]

21. 1911 ஆம் ஆண்டு இர்விங் பிஷர் வெளியிட்ட புத்தகம் _______.
அ) பண அளவுக் கோட்பாடு
ஆ) பண தரக்கோட்பாடு
இ) (அ) மற்றும் (ஆ)
ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
[விடை: அ) பண அளவுக் கோட்பாடு]

22. _______ முறை மைய வங்கியால் கட்டுப்படுத்தப்படுகிறது.
அ) பிளாஸ்டிக் நாணய முறை
ஆ) மெட்டாலிக்
இ) வெள்ளி நாணய முறை
ஈ) காகித நாணய முறை
[விடை: ஈ) காகித நாணய முறை]

23. _______ பொழுது பொருளாதார நடவடிக்கைகள் மிக மந்த நிலையில் காணப்படும்.
அ) வீக்கத்தின் ஆ) பின்னடைதலின்
இ) வாட்டத்தின்
ஈ) மீட்டெய்தப் பெறும்
[விடை: இ) வாட்டத்தின்]





orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

அத்தியாயம்
7

# பன்னாட்டுப் பொருளியல்

## பொருளடக்கம்


7.1 அறிமுகம்
7.2 பன்னாட்டுப் பொருளியலின் பொருள் விளக்கம்
7.3 பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம்
7.4 வாணிகம் – பொருள் விளக்கம்
7.4.1 உள்நாட்டு வாணிகம்
7.4.2 பன்னாட்டு வாணிகம்
7.4.3 உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகள்
7.5 பன்னாட்டு வாணிகக் கோட்பாடுகள்
7.5.1 பன்னாட்டு வாணிப தொன்மை கோட்பாடுகள்
7.5.2 ஆடம் ஸ்மித்தின் முழுச் செலவுக் கோட்பாடு
7.5.3 ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவுக் கோட்பாடு
7.5.4 புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு
7.5.5 தொன்மை மற்றும் புதிய கோட்பாடுகள் ஒப்பீடு
7.6 பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகள்
7.7 வாணிப வீதம்
7.7.1 வாணிப வீதம்
7.7.2 வாணிப வீதத்தின் வகைகள்
7.7.3 உற்பத்தி காரணிகள் பரிமாற்றம் அடிப்படையிலான வாணிப வீத வகைகள்
7.8 வாணிபக் கொடுப்பல் நிலையும் அயல்நாட்டு செலுத்து நிலையும்
7.8.1 வாணிபக் கொடுப்பல் நிலை
7.8.2 அயல்நாட்டு செலுத்து நிலை
7.8.3 அயல்நாட்டு செலுத்து நிலையின் கூறுகள்
7.8.4 அயல்நாட்டுச் செலுத்து நிலையின் சமனற்ற நிலை
7.8.5 அயல்நாட்டுச் செலுத்து நிலை சமனற்ற நிலையின் வகைகள்
7.8.6 அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மைக்கான காரணங்கள்
7.8.7 அயல்நாட்டுச் செலுத்து நிலை சமமின்மையை நீக்கும் வழிமுறைகள்
7.9 பண மாற்று வீதம்
7.9.1 அந்நிய செலாவணியின் பொருள் விளக்கம்
7.9.2 செலாவணி வரைவிலக்கணம்
7.9.3 செலாவணி மாற்று வீதம்
7.9.4 சமநிலை பண்டமாற்று வீதம் வரைவிலக்கணம்
7.9.5 சமநிலை பணமாற்று வீதம் நிர்ணயமாதல்
7.9.6 பண மாற்று வீதம் நிர்ணயமுறைகள்
7.9.7 பண மாற்று வீத வகைகள்
7.9.8 பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகள்.
7.10 அன்னிய நேரடி மூலதனமும் பன்னாட்டு வாணிகமும்
7.10.1 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் பொருள் விளக்கம்
7.10.2 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள்
7.10.3 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகள்
7.10.4 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் தீமைகள்
7.10.5 இந்தியாவின் வெளிநாட்டு நேரடி மூலதனம்.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
www.surabooks.com

## அத்தியாயம் 7

# கருத்துப் படம்

**பன்னாட்டுப் பொருளியல்**

- அறிமுகம்
- பன்னாட்டு பொருளியலின் பொருளடக்கம்
- பன்னாட்டு வாணிகக் கோட்பாடுகள்
  - பன்னாட்டு வாணிப தொன்மை கோட்பாடுகள்
  - ஆடம்ஸ்மித்தின் முழுச் செலவுக் கோட்பாடு
  - ரிகார்டோவின் ஒப்புமைச் செலவு கோட்பாடு
  - புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடுகள்
  - தொன்மை மற்றும் புதிய கோட்பாடுகள் ஒப்பீடு
- வணிப வீதம்
  - வாணிப வீதம்
  - வாணிப வீதத்தின் வகைகள்
  - உற்பத்தி காரணிகள் பரிமாற்றம் அடிப்படையிலான வாணிப வீத வகைகள்
- வணிகம் பொருள்–விளக்கம்
  - உள் நாட்டு வாணிகம்
  - பன்னாட்டு வாணிகம்
  - உள் நாட்டு வாணிகத்திற்கும் பன்னாட்டு வாணிகத்திற்குமிடையிலான வேறுபாடுகள்
- பன்னாட்டு பொருளியலின் பொருள் விளக்கம்
- பன்னாட்டு வாணிபத்தின் நன்மைகள்
- பணமாற்று வீதம்
  - சமநிலை பணமாற்று வீதம் நிர்ணயமாதல்
  - பணமாற்று வீதம் நிர்ணய முறைகள்
  - பணமாற்று வீதம் வகைகள்
  - பணமாற்று வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகள்
  - சூழ்நிலை மாற்று வீதம் வரைவிலக்கணம்
  - செலவாணி மாற்று வீதம்
  - அந்நிய செலவாணியின் பொருள் விளக்கம்
  - அந்நிய செலவாணி வரைவிலக்கணம்
- வணிகக் கொடுப்பல் நிலையும் அயல்நாட்டு செலுத்து நிலையும்
  - அயல்நாட்டு செலுத்து நிலை
  - அயல்நாட்டு செலுத்து நிலையின் கூறுகள்
  - அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையின் வகைகள்
  - அயல்நாட்டுச் செலுத்து நிலை சமமின்மைக்கான காரணங்கள்
  - அயல்நாட்டு செலுத்து நிலை சமமின்மையை நீக்கும் வழிமுறைகள்
  - வாணிபக் கொடுப்பல் நிலை
- அந்நிய நேரடி மூலதனமும் பன்னாட்டு வணிகமும்
  - வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் பொருள் விளக்கம்
  - வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள்
  - வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகள்
  - இந்தியாவின் வெளிநாட்டு நேரடி மூலதனம்
  - வெளிநாட்டு நேரடி மூலதனதின் தீமைகள்

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **பன்னாட்டுப் பொருளியலின் பொருள் விளக்கம்** | : | பன்னாட்டுப் பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் ஒரு பாடப்பிரிவாகும். |
| **வாணிகம்** | : | வாணிகம் என்பது ஒரு சக்தி வாய்ந்த நாடுகளை இணைக்கும் கருவியாகும். |
| **உள்நாட்டு வாணிகம்** | : | பொருட்கள் மற்றும் பணிகளை ஒரு நாட்டின் அரசியல் மற்றும் புவி எல்லைகளுக்குள் பரிமாறிக் கொள்வதை உள்நாட்டு வாணிகம் எனலாம். |
| **பன்னாட்டு வாணிகம்** | : | பொருட்கள் மற்றும் பணிகளை இரு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாறிக் கொள்வதை பன்னாட்டு வாணிகம் எனலாம். |
| **ஆடம் ஸ்மித்தின் முழுச் செலவுக் கோட்பாடு** | : | வாணியத்தடைகளற்ற சூழலில் குறைவான அடக்கச் செலவில் பொருள் உற்பத்தி செய்யும் தனி தேர்ச்சியை அடைவதினால் அனைத்து நாடுகளுக்கும் பன்னாட்டு வாணிகத்தின் பலன் கிடைக்குமென ஆடம் ஸ்மித் நம்பினார். |
| **வாணிப வீதம்** | : | பன்னாட்டு வாணிக முறையின் இலாபம் என்பது வாணிப வீதத்தை பொறுத்தும், எற்றுமதி, இறக்குமதி விலை வீதத்தை பொறுத்தும் அமையும். |
| **மொத்த பண்டமாற்று வாணிப வீதம்** | : | ஒரு குறிப்பிட்ட அளவு ஏற்றுமதி செய்யும் நாடு எந்த அளவு பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளலாம் என மொத்த பண்டமாற்று வாணிப வீதம் சுட்டிக் காட்டுகிறது. |
| **ஒற்றைக் காரணி வாணிப வீதம்** | : | ஏற்றுமதி விலை குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதி விலைக் குறியீட்டெண்ணுக்குமிடையேயான விகிதத்தில் ஏற்றுமதிக்கான உற்பத்தி தொழில் துறையின் உற்பத்தி திறன் குறியீட்டெண்ணின் மதிப்பினால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே ஒற்றைக்காரணி வாணிப வீதமாகும். |
| **வாணிபக் கொடுப்பல் நிலை** | : | ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பையே வாணிபக் கொடுப்பல் நிலை என்கிறோம். |
| **அயல்நாட்டு செலுத்து நிலை** | : | ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்துநிலை அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்துநிலை என்கிறோம். |
| **பண மதிப்புக் குறைப்பு** | : | ஒரு நாட்டின் மைய வங்கி அந்நாட்டின் பணத்தை மற்ற நாடுகளின் பண மதிப்பில் தானாக முன்வந்து குறைத்து நிர்ணயிப்பதே செலாவணி மதிப்பு குறைப்பு ஆகும். |
| **அந்நிய செலாவணிக் கட்டுப்பாடு** | : | அந்நிய செலாவணி சந்தையில் அரசு தலையிடுவதையே செலாவணிக் கட்டுப்பாடு என்கிறோம். |
| **வாணிப வழிமுறைகள்** | : | ஏற்றுமதிக்கு ஊக்கமளித்து இறக்குமதியை குறைக்கும் வழிமுறைகளையே வாணிப வழிமுறைகளாகும். |
| **பண மாற்று வீதம்** | : | பண மாற்று வீதத்தை அந்நிய செலாவணி மாற்று வீதம் என்ற சொல்லை பயன்படுத்தியும் குறிப்பிடலாம். |
| **அந்நிய செலாவணி [FOREX]** | : | ஒரு நாட்டின் மைய வங்கியின் இருப்பில் உள்ள மற்ற நாடுகளின் பணமே அந்நிய செலாவணி என பொருள் கொள்ளலாம். |
| **சமநிலை பண மாற்று வீதம் நிர்ணயமாதல்** | : | அந்நிய செலாவணி சந்தையில் சமநிலை பணமாற்று வீதம் பொது விலை நிர்ணய கோட்பாட்டின்படி நிர்ணயமாகிறது. |





orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# புத்தக வினாக்கள் மற்றும் விடைகள்

## மாதிரி வினாக்கள்

### பகுதி – அ

**சரியான விடையை தெரிவு செய்க :**

**1. இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ______.** *[PTA-3; Aug-2021]*

(அ) வெளிவாணிகம்

(ஆ) உள்வாணிகம்

(இ) மண்டலங்களுக்கிடையான வாணிகம்

(ஈ) உள்நாட்டு வாணிகம்

**[விடை. (அ) வெளிவாணிகம்]**

**2. கீழ்கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது?**

(அ) ஒரு பொருளின் மேம்பாட்டு கால கட்டம்

(ஆ) உற்பத்தி காரணிகளின் ஒப்பீட்டு விலை

(இ) அரசாங்கம்

(ஈ) மேற்கண்ட அனைத்தும்

**[விடை. (ஈ) மேற்கண்ட அனைத்தும்]**

**3. பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக் காரணம்.**

(அ) வணிகக் கட்டுப்பாடுகள் *[PTA-5]*

(ஆ) உற்பத்திக் காரணிகள் இடம் பெயர இயலாமை

(இ) நாடுகளின் கொள்கை வேறுபாடுகள்

(ஈ) மேற் சொன்ன அனைத்தும்

**[விடை. (ஈ) மேற் சொன்ன அனைத்தும்]**

**4. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படை காரணம்**

(அ) ஒரு நாடு ஒரு குறிப்பிட்டப் பொருளையும் வேறு நாடு மற்றொரு பொருளையும் உற்பத்தி செய்ய விரும்புகிறது.

(ஆ) உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத் தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது.

(இ) பன்னாட்டு வாணிகம் லாப குவிப்பு வாய்ப்பை அதிகப்படுத்துகிறது.

(ஈ) நாடுகளில் நிலவும் வட்டி வீதமும் வெவ்வேறு அளவில் உள்ளது.

**[விடை. (ஆ) உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத் தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது]**

**5. புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது?**

(அ) முழுமைச் செலவு

(ஆ) ஒப்புமைச் செலவு

(இ) உற்பத்திக் காரணிக் கோட்பாடு

(ஈ) எதுவுமில்லை

**[விடை. (இ) உற்பத்திக் காரணிக் கோட்பாடு]**

**6. பண மாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை** *[Govt. MQP -2019; QY-2019; Mar-2020]*

(அ) பண சந்தை

(ஆ) அந்நிய செலாவணி

(இ) பங்கு சந்தை

(ஈ) மூலதன சந்தை

**[விடை. (ஆ) அந்நிய செலாவணி]**

**7. கீழ்கண்ட எந்த பணமாற்று நிர்ணயமுறையில் சந்தை விலைகளான தேவையும் அளிப்பும் பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கிறது.**

(அ) மாறா பணமாற்று வீதம்

(ஆ) மாறுகின்ற பண மாற்று வீதம்

(இ) நிலைத்த பணமாற்று வீதம்

(ஈ) அரசு ஒழுங்காமைப்பும் முறை

**[விடை. (ஆ) மாறுகின்ற பண மாற்று வீதம்]**

**8. ஏற்றுமதி நிகரம் என்பது** *[QY-2019; HY-2019; PTA-4]*

(அ) ஏற்றுமதி × இறக்குமதி

(ஆ) ஏற்றுமதி + இறக்குமதி

(இ) ஏற்றுமதி – இறக்குமதி

(ஈ) பணிகள் ஏற்றுமதி

**[விடை (இ) ஏற்றுமதி – இறக்குமதி]**

**9. கீழ்கண்டவர்களில் யார் ஒற்றைக் காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தவர்.**

(அ) ஜேக்கப் வைனர்

(ஆ) G.S. டோரன்ஸ்

(இ) எப்.டபில்யூ. டாசிக்

(ஈ) ஜே.எஸ்.மில்

**[விடை. (அ) ஜேக்கப் வைனர்]**





orders@surabooks.com PH:9600175757 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores





## பகுதி - ஆ

### கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும் :

**21. பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?** *[PTA-6]*

**விடை.** பன்னாட்டுப் பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் ஒரு பாடப்பிரிவாகும்.

**22. பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.** *[PTA-4]*

**விடை.** பொருட்கள் மற்றும் பணிகளை இரு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாறிக் கொள்வதை பன்னாட்டு வாணிகம் எனலாம். இது நாடுகளின் எல்லைகளை கடந்து நடைபெறும் வாணிகம். இதை வெளிவர்த்தகம், அல்லது 'அயல் வாணிகம்' அல்லது 'மண்டலங்களுக்கிடையிலான வாணிகம்' என்றும் அழைக்கலாம்.

**23. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக.** *[PTA-1]*

**விடை.** (i) பன்னாட்டு வாணிகம் அனைத்து வணிக நாடுகளிலும் சமநிலை நிலவ உதவுகிறது.

(ii) பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் நாடுகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

**24. பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும், டேவிட் ரிக்கார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?** *[PTA-1]*

**விடை.**

| ஆடம் ஸ்மித் | டேவிட் ரிக்கார்டோ |
|---|---|
| குறைந்த தனி அடக்க விலையில் பொருள் உற்பத்தி | சிறப்பு தேர்ச்சியின் மூலம் குறைந்த விலையில் பொருள் உற்பத்தி |
| அடக்க விலை குறைவு மூலமாக இரு நாடுகளுக்கிடையே பரிமாற்றம் | சிறப்பு தேர்ச்சியின் மூலம் இரு நாடுகளுக்கிடையே பரிமாற்றம் |

**25. வாணிப வீதத்தினை விளக்குக.**

**விடை.** (i) பன்னாட்டு வாணிகத்தினால் கிடைக்கும் நன்மைகள் வாணிப வீதத்தை சார்ந்திருக்கும்.

(ii) ஏற்றுமதி பொருளின் விலைக்கும் இறக்குமதி பொருளின் விலைக்குமிடையேயான விகிதமே வாணிப வீதம் எனலாம்.

வாணிப வீதம் =

$$\frac{\text{ஏற்றுமதி விலைக் குறியீடு}}{\text{இறக்குமதி விலைக் குறியீடு}} \times 100$$

**26. வாணிபச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது?** *[Govt. MQP -2019]*

**விடை.** ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்து நிலை என்கிறோம்.

**27. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?** *[PTA-2; Aug-2021]*

**விடை.** ஒரு அலகு அயல் பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டு பணத்தை கொடுக்கிறோம் என்பதே மாற்று வீதம் ஆகும்.

## பகுதி - இ

### கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும் :

**28. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக** *[QY-2019; PTA-1]*

**விடை. பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம்:** பன்னாட்டு பொருளியலின் பொருளடக்கம் பல பாகங்களை உள்ளடக்கியது. அவை கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(i) **தூய வாணிபக் கோட்பாடு :** நாடுகள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான காரணங்கள், எந்த வகையான பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதை விவரிக்கும் பிரிவை தூய வாணிப கோட்பாடாகும்.

(ii) **கொள்கைச் சச்சரவுகள் :** நாடுகளுக் கிடையேயான வாணிக உறவுகளை கட்டுப்படுத்துவதா, தடைகளற்ற வாணிகத்தை அனுமதிப்பதா போன்றவற்றை இப்பிரிவு விவாதிக்கிறது.

(iii) **பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும் :** இந்த பிரிவு பன்னாட்டு கூட்டமைப்பு சுங்கவரி ஒன்றியங்கள், பணவியல் ஒன்றியங்கள் மற்றும் நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு, அமைப்புகளின் மூலமாக நாடுகளின் பொருளாதாரம் இணைக்கப்பட்டுள்ளதை விவாதிக்கிறது.

(iv) **பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள் :** பன்னாட்டுப் பண நிதியம், மறு கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான பன்னாட்டு வங்கி (உலக வங்கி) உலக வர்த்தக நிறுவனம் மற்றும் வாணிகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு போன்ற பன்னாட்டு அமைப்புகள் நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவுகளை விவரிக்கிறது.



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**29. பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை எழுது.**

விடை.

| வ. எண் | தொன்மைப் பன்னாட்டு வாணிபக்கோட்பாடு | புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு |
|---|---|---|
| 1. | பன்னாட்டு வாணிபத்தை விளக்குவதற்கு உழைப்பைச் சார்ந்த மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது | பன்னாட்டு வாணிபத்தை விளக்குவதற்கு பொது மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. |
| 2. | இது ஒரு காரணி (உழைப்பு) மாதிரியாகும். | இது இரு காரணி (உழைப்பு, மூலதனம்) மாதிரியாகும். |
| 3. | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தி திறன் வேறுபாடுகள் காரணம் என்கிறது. | ஒப்புமை செலவு வேறுபாட்டிற்கு உற்பத்தி காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடே காரணம் என நம்புகிறது. |

**30. மொத்த மற்றும் நிகர பண்ட பரிமாற்று வாணிப வீதத்தை சுருக்கமாக எழுதுக.**

விடை. (1) **நிகர பண்டமாற்று வாணிப வீதம்:–**

(i) நிகர பண்டமாற்று வீதத்தை எப்.டபில்யூ. தாசிக் (1927)ல் வடிவமைத்தார்.

(ii) ஏற்றுமதி விலைகளுக்கும், இறக்குமதி விலைகளுக்கும் இடையிலான விகிதமே நிகர பண்டமாற்று வாணிப வீதம் என்கிறார்.

(iii) ஜேக்கப் வைனர் இதை பொருள் வாணிப வீதம் என்றழைக்கிறார்.

(iv) Tn = (Px / Pm) x 100

Tn = நிகர பண்ட மாற்று வாணிப வீதம்

Px = ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

Pm = இறக்குமதி விலைக் குறியீட்டெண் ஆகும்.

(2) **மொத்த பண்டமாற்று வாணிப வீதம்:–**

(i) இந்த வீதத்தையும் தாசிக் என்பவரே 1927 அறிமுகப்படுத்தினார். நிகர பண்டமாற்று வீதத்தை மேம்படுத்தியதை வடிவமைத்து உள்ளார்.

(ii) மொத்த ஏற்றுமதி பொருட்களின் குறியீட்டெண்ணிற்கும், மொத்த இறக்குமதிப் பொருட்களின் குறியீட்டெண்ணிற்குமிடையிலான விகித்தத்தை 100 ஆல் பெருக்க கிடைக்கும் தொகையாக மொத்த பண்ட மாற்று வாணிப வீதத்தை புரிந்து கொள்ளலாம்.

(iii) Tg = (Qm / Qx) × 100

Tg = மொத்த பண்டமாற்று வாணிப வீதம்

Qm = இறக்குமதி அளவு குறியீட்டெண்

Qx = ஏற்றுமதி அளவு குறியீட்டெண்

**31. வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலைக்குமிடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை பட்டியலிடுக.** *[PTA-4; Aug-2021]*

விடை.

| வ. எண் | வாணிப கொடுப்பல் நிலை | அயல்நாட்டு செலுத்து நிலை |
|---|---|---|
| 1. | ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பையே வாணிபக் கொடுப்பல் நிலை என்கிறோம். | ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையை அயல்நாட்டு செலுத்து நிலை என்கிறோம். |
| 2. | ஒரு நாட்டின் வாணிபக் கொடுப்பல் நிலை அறிக்கையில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விவரங்கள் மட்டுமே தொகுத்தளிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. | இது இரட்டைப் பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கையாகும். |
| 3. | பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதியை "புலப்படும் வாணிகம்" எனவும் அழைக்கலாம். | நாடுகளுக்கிடையே பொருட்கள் மட்டுமல்லாமல் பணிகள், மூலதனம், பணம் போன்றவையும் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. |

**32. இறக்குமதி பங்களவு என்றால் என்ன?** *[Govt. MQP -2019]*

விடை. (i) ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் ஒரு பொருளைக் குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட மதிப்பிற்குள் இறக்குமதி செய்ய அனுமதிப்பது இறக்குமதி பங்களவாகும்.



www.surabooks.com



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



(vi) நாடுகள் பன்னாட்டு வாணிகத்தின் மீது தடைகளை விதிப்பதில்லை.

(vii) உற்பத்தி தொழில் நுட்பத்தில் மாற்றங்கள் நிகழ்வதில்லை.

**எடுத்துக்காட்டு:**

✦ ரிக்காட்டோவின் ஒப்புமைச் செலவு கோட்பாட்னை அமெரிக்காவும் இந்தியாவும் துணி மற்றும் கோதுமை உற்பத்தி செலவுகளை கற்பனை உதாரணங்களாக கொண்டு புரிந்து கொள்ளலாம்.

✦ ஒரு அலகு உற்பத்தி செய்ய தேவைப்படும் உழைப்பின் அளவு:

| நாடு | துணி | கோதுமை | உள்நாட்டு பரிமாற்ற விகிதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 100 | 120 | 1 மூட்டை கோதுமை = 1.2 மீட்டர் துணி |
| இந்தியா | 90 | 80 | 1 மூட்டை கோதுமை = 0.88 மீட்டர் துணி |




(i) இந்தியாவுக்கு துணி மற்றும் கோதுமை இரு பண்ட உற்பத்தியிலும் முழுப் பயன்பாட்டுத் தேர்ச்சி இருப்பது மேற்கண்ட உதாரணத்திலிருந்து தெளிவாகிறது.

(ii) இந்தியாவுக்கு கோதுமை உற்பத்தியில் ஒப்பீட்டு செலவு சாதகமாக உள்ளது.

(iii) (80/120 < 90/100) அமெரிக்காவுக்கு துணி உற்பத்தியில் ஒப்புமைச் செலவு பாதகம் குறைவாக உள்ளது.

(iv) கோதுமை, துணி உற்பத்தியில் அமெரிக்காவுக்கு பாதிப்பு குறைவாக இருப்பதால் அமெரிக்கா துணி உற்பத்தியில் தேர்ச்சி பெற்று இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து கோதுமையை இறக்குமதி செய்து கொள்ளலாம். பன்னாட்டு வாணிகத்தில் பண்ட பரிமாற்ற விகிதம் 0.88 லிருந்து 1.2 அலகு வரை துணி ஒரு அலகு கோதுமையாக இருந்தால் இரு நாடுகளும் நன்மை பெறும்.

(v) பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடாமல் இந்தியாவும் அமெரிக்காவும் துணி மற்றும் கோதுமையை அவரவர்களே உற்பத்தி செய்ய இந்தியா 170 அலகு உழைப்பையும், அமெரிக்கா 220 அலகு உழைப்பையும் பயன்படுத்த வேண்டிவரும்.

(vi) மாறாக, பன்னாட்டு வாணிகத்தை அனுமதித்தால் 80 அலகு உழைப்பளவைக் கொண்டு உற்பத்தி செய்த ஒரு மூட்டை கோதுமையை அமெரிக்காவிடம் கொடுத்து 90 அலகு உழைப்பு தேவைப்படுகிற ஒரு மீட்டர் துணியை வாங்கிவிட முடியும். ஆக இந்தியா 160 அலகு மட்டுமே உழைப்பைப் பயன்படுத்தி இரண்டு மூட்டை கோதுமையை உற்பத்தி செய்து, அதில் ஒரு மூட்டை கோதுமையை அமெரிக்காவிடம் ஒரு மீட்டர் துணியை பரிமாறிக் கொள்ளலாம். இதுவே பன்னாட்டு வாணிபத்தால் இந்தியாவுக்கு கிடைக்கும் பலனாகும்.

**திறனாய்வு :**

(i) உழைப்பு செலவு உற்பத்தி செலவில் ஒரு பகுதிதான். எனவே, உழைப்பு செலவு அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள கோட்பாடு உண்மையை பிரதிபலிக்கவில்லை

(ii) பல்வேறு நாட்டுத் தொழிலாளிகள் ஒரே அளவு திறன் பெற்றவர்களல்லர்.

**37. புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டினை விவாதிக்கவும்.**

விடை. **புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு :**

(i) சுவீடன் நாட்டு பொருளியல் அறிஞர் இலி ஹெக்சர் 1919ல் ஒரு பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டை விளக்கினார்.

(ii) இந்த கோட்பாடு ரிக்கார்டோவின் கோட்பாட்டின் விரிவாக்கமாகவும் அமைந்தது.

(iii) நாடுகளுக்கிடையே உற்பத்தி வளங்களின் அளிப்பு அளவில் நிலவும் வேறுபாடே பன்னாட்டு வாணிகத்துக்கான காரணம் என்று இலி ஹெக்சரின் உற்பத்தி வள வேறுபாடு கோட்பாட்டை புதிய பன்னாட்டு வாணிக கோட்பாடு என்றழைக்கிறோம்.

**கோட்பாடு :**

(i) ஒப்புமைச் செலவு வேறுபாடே பன்னாட்டு வாணிகத்திற்கான காரணம் என தொன்மை கோட்பாடுகளில் காணப்படுகிறது.

(ii) கீழ்கண்ட இரண்டு காரணங்களால் நாடுகளுக்கிடையே ஒப்புமைச் செலவு வேறுபடுகின்றது.

(1) நாடுகள் பெற்றுள்ள உற்பத்தி காரணிகள் அளவு வேறுபடுகிறது.

(2) உற்பத்திக்குத் தேவைப்படும் உற்பத்தி காரணிகளின் விகிதமும் வேறுபடுகிறது.





orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**40. அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விவரி.** *[HY-2019]*

**விடை.** அயல் நாட்டுச் செலுத்துநிலை சமனற்ற நிலையின் வகைகள்.

(1) சுழற்சி, சமனற்ற நிலை
(2) நீண்ட கால சமனற்ற நிலை
(3) கட்டமைப்பு சமனற்ற நிலை

(1) **சுழற்சி சமனற்ற நிலை:**

(i) வாணிப சுழற்சியின் விளைவாக எழும் அயல் நாட்டு செலுத்து சமனற்ற நிலையை சுழற்சி சமனற்ற நிலை என்கிறோம்.

(ii) கீழ்கண்ட இரண்டு காரணங்களால் இது நிகழ்கிறது. முதலாவது, நாடுகள் வாணிப சுழற்சியின் வெவ்வேறு கட்டங்களிலிருப்பது.

(iii) இரண்டாவது, நாடுகளுக்கிடையே தேவை நெகிழ்வு அளவு மாறுபடுவது.

(2) **நீண்ட கால சமனற்ற நிலை:**

(i) நாடுகள் பொருளாதார வளர்ச்சி படி நிலைகளில் முன்னேறும்பொழுது நீண்டகால தலைகீழ் மாற்றங்களே நிகழ்வதால் உண்டாகும்.

(ii) வளர்ச்சியின் துவக்க நிலையில் ஒரு நாட்டின் உள்நாட்டு முதலீடு உள்நாட்டு சேமிப்பைவிட கூடுதலாக இருக்கும்.

(iii) இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருக்கும்.

(iv) இந்தியாவில் 1951 லிருந்தே இந்த சூழ்நிலை நிலவுகிறது.

(3) **கட்டமைப்பு சமனற்ற நிலை:**

(i) நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையே கட்டமைப்பு சமனற்ற நிலையாகும்.

(ii) போக்குவரத்து வழிகளும் செலவும் மாற்றமடைதல் போன்றவையே பொருளாதார கட்டமைப்பு மாற்றம் என்கிறோம்.

**41. பண மாற்று வீதம் எவ்வாறு இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது என்பதை உதாரணத்துடன் விளக்குக.** *[PTA-5; Mar-2020; Sep-2020]*

**விடை.** (1) **சமநிலை பணமாற்று வீதம் வரைவிலக்கணம்:**

"ஒரு குறிப்பிட்ட காலத்தில் அயல்நாட்டுச்செலுத்து நிலை சமநிலையில் நிறுத்தி வைக்கும் பணமாற்று வீதம் சமநிலை பணமாற்று வீதம்."

(2) **சமநிலை பணமாற்று வீதம் நிர்ணயமாதல்:**

(i) அந்நிய செலாவணி சந்தையில் சமநிலை பணமாற்று வீதம் பொது விலை நிர்ணய கோட்பாட்டின் படி நிர்ணயமாகிறது.

(ii) சந்தை விசைகளான தேவையளவும் வளங்களளவும் (அளிப்பு) ஒருங்கே செயல்பட்டு சமநிலை விலையை நிர்ணயிக்கும் என்பதே பொது விலை நிர்ணயக் கோட்பாடாகும்.

(iii) இக்கோட்பாட்டின்படி பார்த்தால் அந்நிய செலாவணிக்கான தேவையளவும் வழங்கலளவும் சமமாகுமளவில் சமநிலை பண மாற்று வீதம் நிர்ணயமாகும்.

(iv) வரைபடத்தில் அந்நிய செலாவணி தேவை மற்றும் அளிப்பு வளைகோடுகள் சந்திக்கும் வெட்டுப்புள்ளியில் சமநிலை பண மாற்று வீதம் நிர்ணயமாகும்.




அந்நிய செலாவணியும் தேவையும் அளிப்பும்

(v) மேலே உள்ள வரைபடத்தில் செங்குத்து அச்சு பண மாற்று வீதத்தையும், படுகிடை அச்சு அந்நிய செலாவணிக்கான தேவை மற்றும் அளிப்பு அளவுகள் குறிக்கப்பட்டுள்ளன.

(vi) E - என்ற புள்ளியில் அந்நிய செலாவணி தேவை வளைகோடு அளிப்பு வளைகோட்டை வெட்டுகிறது.

(vii) தேவையும் (DD) அளிப்பும் (SS) சந்திக்கும் வெட்டுப்புள்ளியில் (E) பணமாற்று வீதம் சமநிலையை அடைகிறது.

(viii) தேவையும் அளிப்பும் OQ என்ற அளவில் இருக்கும்பொழுது நிர்ணயமாகும் $OP_2$ என்ற பண மாற்றுவிதமே சமநிலை பணமாற்று வீதமாகும்.

**42. பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.** *[PTA-6]*

**விடை.** (i) உலக பொருளாதாரத்தின் அந்நிய நேரடி முதலீடு முக்கிய காரணியாகும்.

(ii) பன்னாட்டு வணிகம் மற்றும் அந்நிய நேரடி முதலீடு ஆகிய இரண்டும் நெருங்கிய தொடர்புடையது.





orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

**12** ஆம் வகுப்பு. **அரசு துணைத்தேர்வு வினாத்தாள் - ஆகஸ்ட் – 2021 விடைகளுடன்**

## PART - III

## பொருளியல்

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்** :

(1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **[20 × 1 = 20]**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது

அ) ஐ.சி.ஐ.சி.ஐ.

ஆ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

இ) இந்திய ரிசாவ் வங்கி

ஈ) நபார்டு

**2.** பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர்?

அ) கார்ல் பியர்சன்

ஆ) ஃபிரான்ஸிஸ் கால்டன்

இ) ஸ்பியா மேன்

ஈ) ரேக்னர் ஃ பிரிஸ்க்

**3.** MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ) ரிகார்டோ ஆ) ஆடம் ஸ்மித்

இ) மால்தஸ் ஈ) J.M. கீன்ஸ்

**4.** கீழ்கண்ட எந்த திட்டம் வேளாண்மை மற்றும் கிராமப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது?

அ) காந்தியத் திட்டம்

ஆ) மக்கள் திட்டம்

இ) விஸ்வேசுவரய்யா திட்டம்

ஈ) பாம்பே திட்டம்

**5.** மொத்த அளிப்பு =___________

அ) C+S+T+(X – M) ஆ) C+I+G

இ) C+S+T+Rf ஈ) C+S+G+(X – M)

**6.** இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை?

அ) மருந்து உற்பத்தி ஆ) வங்கி

இ) காப்பீடு ஈ) அணு ஆற்றல்

**7.** சுட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு:

அ) இத்தாலி ஆ) பிரான்சு

இ) ரஷ்யா ஈ) ஜெர்மனி

**8.** முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு ___________ ஆகும்.

அ) இந்தியா ஆ) ரஷ்யா

இ) சீனா ஈ) அமெரிக்கா

**9.** தொகுத் தேவையின் கூறு ___________ ஆகும்

அ) ஏற்றுமதி மட்டும் ஆ) தனிநபர் தேவை

இ) இறக்குமதி மட்டும் ஈ) அரசுச் செலவு

**10.** இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ___________.

அ) மண்டலங்களுக்கிடையான வாணிகம்

ஆ) வெளி வாணிகம்

இ) உள்நாட்டு வாணிகம்

ஈ) உள் வாணிகம்

**11.** பணவீக்கம் என்பது

அ) பணமதிப்பு அதிகரிப்பு

ஆ) விலைகள் அதிகரிப்பு

இ) விலைகள் மாறாதிருத்தல்

ஈ) விலைகள் குறைதல்

**12.** எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?

அ) ஐந்து ஆ) இரண்டு

இ) நான்கு ஈ) மூன்று



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



13. வன அழிவிற்கான முதன்மை காரணம் யாது?
அ) நிலத்தை சமப்படுத்துதல்
ஆ) மரம் வெட்டும் தொழில்
இ) தட்பவெட்பநிலை சமப்படுத்துதல்
ஈ) இயற்கை வன அழிவு

14. வரி கீழ்க்காணும் குணங்களைக் கொண்டது
அ) பிரதிபலன் கருதாமை
ஆ) வரி மறுப்பு ஒரு குற்றம்
இ) கட்டாயத் தன்மை
ஈ) மேல் கூறப்பட்ட அனைத்தும்

15. சமத்துவத்தின் தந்தை :
அ) ஆடம் ஸ்மித் ஆ) ஜே.எம். கீன்ஸ்
இ) சாமுவேல்சன் ஈ) காரல் மார்க்ஸ்

16. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?
அ) ஜுலை 1982 ஆ) ஜுலை 1962
இ) ஜுலை 1992 ஈ) ஜுலை 1972

17. மொத்த வருவாய்க்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு .
அ) முதலீட்டுச் சார்பு ஆ) நுகர்வு சார்பு
இ) மொத்த தேவைச் சார்பு
ஈ) சேமிப்பு சார்பு

18. MV என்பது :
அ) வங்கிப் பண அளிப்பு
ஆ) பணத் தேவை
இ) மொத்த பண அளிப்பு
ஈ) சட்டபூர்வ பண அளிப்பு

19. ___________ ஆல் தேசி வருவாயை வகுத்தால் தலா வருமானம் கிடைக்கும்.
(i) செலவு
(ii) உற்பத்தி
(iii) GNP
(iv) நாட்டின் மக்கள் தொகை

20. பன்னாட்டு பண நிதியம் கீழ்க்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது.
அ) பிரிட்டன் வூட்ஸ் மாநாடு
ஆ) பான்டுங் மாநாடு
இ) தோஹா மாநாடு
ஈ) டங்கல் வரைவு

## பகுதி - II

**குறிப்பு :** ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண். 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

**7 × 2 = 14**

21. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக.
22. முடுக்கி – வரையறுக்கவும்.
23. ரொக்க இருப்பு விகிதம் (CRR) என்றால் என்ன?
24. மைய வங்கி (RBI) என்பதை வரையறுக்கவும்?
25. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?
26. சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக
27. மாசுபடுதலின் வகைகளை எழுதுக .
28. பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் தருக.
29. உடன் தொடர்பு என்பதனை வரையறுக்கவும்.
30. GST -யின் கூறுகள் யாவை?

## பகுதி - III

**குறிப்பு :** ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண். 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

**7 × 3 = 21**

31. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக .
32. GDP குறைப்பான் இலக்கணம் தருக.
33. சே விதியின் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.
34. நுகர்வு நாட்டம் என்றால் என்ன?
35. பொருளாதார அளவையியலின் நோக்கங்களை கூறுக.
36. வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலைக்குமிடையிலான வேறுபாடுகளைப் பட்டியலிடுக.
37. பிரிக்ஸ் மாநாடு 2018 -ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.
38. திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகளை தருக.
39. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
40. இ – கழிவுகள் என்பதன் பொருள் தருக.

## பகுதி - IV

**குறிப்பு:** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**7 × 5 = 35**

41. அ) உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.

(அல்லது)

ஆ) இந்திய ரிசாவ் வங்கியின் பணிகளை விவரிக்கவும்

42. அ) வரி விதிப்பு விதிகளை விவரிக்கவும்,

# SURA'S 12TH STD SCHOOL GUIDES

2022-23 EDITION




**Call @**

**9600175757**

**8124301000**

**orders@surabooks.com**

**Buy Online @**

surabooks.com